DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC. 178/2022 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW 2 |
| | { Prosecution |
| | { |
| Name | : விவேகானந்தன் |
| Father's Name | : த/பெ. செங்கோட்டுவேலு |
| Taluk | : சங்ககிரி |
| Calling | :விவசாயம் |
| Religion | :இந்து |
| Age | :61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2023.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.2ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1 முதல் 3- ஆம் எதிர்கள் ஆஜர்

**<u>முதல் விசாரணை</u>**

நான் சங்ககிரி கிராமம் மேஸ்திரி காட்டில் வசிக்கிறேன். நான் விவசாயம் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 06.07.2020-ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு நான் என்னுடைய தோட்டத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்தார்கள். என்னுடைய தோட்டம் அ.சா.1 வீட்டிற்கு எதிரில் 20 அடி துாரத்தில் உள்ளது. அப்போது அ.சா.1 அவரது வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்தார். அப்போது 1-ஆம் எதிரி, அ.சா. 1 யிடம் சண்டை

போட்டார். தேவடியா பையலே என்று திட்டினார். பின்பு கையால் அடித்தார். அப்போது 2- ஆம் எதிரியை அ.சா. 1 ன் கையை பிடித்துக்கொண்டார். அப்போது 3-ஆம் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியால் அ.சா. 1 ன் தோள்பட்டை, இடது பக்க வயிறு, வலது பக்க மார்பு ஆகிய இடங்களில் குத்தினார். நான் உடனே ஓடி சென்று அ.சா. 1 ஐ துாக்கி உட்கார வைத்திருதேன்.எதிரிகளை விலக்கிவிட்டேன். பின்பு அ.சா.1 ன் மகன் தினேஷ்யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரச்சொன்னேன். சுமார் அரை மணி நேரத்தில் வந்துவிட்டார். அப்போது எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அ.சா. 1 க்கு தோள்பட்டை, இடது பக்க வயிறு, வலது பக்க மார்பு ஆகிய இடங்களில் இரத்த காயமானது. உன்னை ஒழித்தால் தான் பிரச்சனை தீரும் என்று சொல்லிக்கொண்டு 3-ஆம் எதிரி குத்தினார். சம்பவத்தின்போது லோகநாதன் என்பவரும் அங்கு வந்துவிட்டார். அவரும் எதிரிகளை விலக்கிவிடும்போது உடனிருந்தார். பின்பு நானும், அ.சா.1 ன் மகனும் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 ஐ சிகிச்சைக்கு காரில் அழைத்து சென்றோம். சம்பவம் தொடர்பாக அ.சா.1 அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் கொடுத்தார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- விவேகானந்தன்

ஒம்/-திரு. ந. பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி